DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

Case No : CC.No.198/2018	Deposition of Witness for : PW4
Name : திருமதி.மீனாகுமாரி	Father/Husband Name :
Age :	Village :
Taluk :	Calling : உதவி ஆய்வாளர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03 July 2025.
Accused A2, A4, A5 present. A1, A3, A6 absent. Petition U/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை :–

1. நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 23.04.2017 ஆம் தேதி நான் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் பணியாற்றிய சமயத்தில் 23.04.2017 ஆம் தேதி 18.00 மணிக்கு சாத்தான்குளம் காவல்நிலைய தலைமைக் காவலர் ரவிச்சந்திரன் நிலையப் பொறுப்பில் இருக்கும் போது சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற (Intimation)தகவலின் பேரில் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு 18.10 மணிக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த செல்வி, க/பெ.அமல்ராஜ் வடக்கு தெரு, பிரண்டாகுளம் என்பரிடம் விசாரணை செய்து, அவரால் எழுத முடியாத காரணத்தினால் அவரிடமிருந்து வாக்குமூலம் பெற்று 19.00 மணிக்கு நிலையம் வந்து சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.123/2017 ச/பி.147, 294(பி), 323, 324 IPC and 4 of TNPHW act பிரிவின் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல். அறிக்கையின் அசலையும், இன்டிமேசனையும் கனம் சாத்தான்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது பார்வைக்கும் வைத்தார்.

2. நான் வழக்கு நகலை பார்வையிட்டும், பாதிக்கப்பட்ட நபரை விசாரணை செய்து 20.00 மணிக்கு சம்பவ இடத்தையும், பார்வையிட்டு சாட்சிகள் சமுத்திர பாண்டி, அந்தோணி முத்து முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து அவர்களிடம் வாக்குமூலமும் பதிவு செய்தேன். அன்றைய தினம் செல்வி.ஜெனிபர் செல்வி.கனகா, பால்ராஜ், ரவிச்சந்திரன் ஆகியோர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரிகளை தேடி சென்றபோது எதிரிகள் தலைமறைவாகியிருந்தனர். எதிரிகளை கைது செய்ய துப்புகளை வைத்தேன். எதிரிகள் அனைவரும் Crl.M.P.3347/2017, நாள் 28.04.2017 ஆம் தேதி சாத்தான்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரண்டர் ஆகி ஜாமீனில் வெளிவந்தனர். 15.07.2017 ஆம் தேதி சாத்தான்குளம் அரசு மருத்துவனையில் இருந்து Wound Certificate பெற்று

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.07.03 16:14:45 +0530

அன்றைய தினம் மருத்துவர் ஆத்திகுமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் அன்றைய தினம் 1 வது எதிரி மரிய துரைராஜ், 2 வது எதிரி யாக்கோபு, 3 வது எதிரி கிறிஸ்டோபர் மற்றும் 6 வது எதிரி அஜித் ஆகியோர் மீது ச/பி.147, 294(பி) IPC and 4 of TNPHW Act படிவும், 4 வது எதிரி பொன்ராணி மீது ச/பி.147, 294(பி), 323 IPC படியும், 5 வது எதிரி மெர்லின் அருள்சீலி மீது ச/பி.147, 294(பி), 324 IPC படியும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து அதன் அசலையும் சாத்தான்குளம் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

4. எதிரகளின் குடும்பத்திற்கும் அ.சா.1 ன் குடும்பத்திற்கும் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். அ.சா.1 ன் ஏற்பாட்டின் பேரில் ஏற்கனவே இருந்த பைப்பை எடுத்து வேறு இடத்திற்கு மாத்தி வைத்தார்கள் என்றால் தண்ணீர் தேங்குவதால் பொதுமக்களுக்கு பிரச்சனை இருந்து வந்தது, அதனால் ஆழ்வார் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரிடம் மனு கொடுத்தன் பேரில் அவர்கள் பைப்பை மாற்றி வேறு இடத்தில் வைத்தார்கள்.

5. பஞ்சாயத்து தேர்தலில் எதிரிகளின் குடும்பத்தினர் ஒரு தரப்பினருக்கும், அ.சா.1 ன் குடும்பத்தினர் மற்றொரு தரப்பினருக்கும் ஆதரவாக செயல்படுவார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

6. அ.சா.1 ன் தரப்பில் ஜஜீதா அவர்கள் ஒன்றிய கவுன்சிலராக வெற்றி பெற்றதால் தான் தண்ணீர் பைப்பை மாற்ற முடிந்தது என்றால் வழக்கு சம்பவம் நடந்தது உண்மை, தேர்தல் பற்றி எனக்கு தெரியாது.

7. அ.சா.1 ன் மீது 5 வது எதிரி மெர்லின் அருள் சீலியை தாக்கியதாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக போடப்பட்ட பொய் வழக்கு இது என்றால் சரியல்ல.

8. சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்த சிவகாமி என்பவரின் தனியார் மருத்துவமனையில் அ.சா.2 கனகா என்பவர் அப்போதைய காலத்தில் செவிலியராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். அ.சா.2 ன் பரிந்துரையின் பெயரில் தான் அ.சா.1 திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. ப.சா.1 முதல் ப.சா.6 வரை உள்ள நபர்கள் அ.சா.1 ன் உறவினர்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகில் உள்ள நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் வேறு நபர்கள் சம்பவ இடத்தில் இல்லாததால் விசாரிக்கவில்லை.

9. பொதுவாக வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் கிராமத்தில் உள்ளவர்கள் காலையில் வேலைக்கு சென்றுவிட்டு மாலையில் தான் வீட்டுக்கு வருவது வழக்கம் என்றால் சரிதான். 2 வது எதிரி யாக்கோபு என்பவரின் அண்ணி தான் அ.சா.1 செல்வி என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

10. 2 வது எதிரி யாக்கோபு குடும்பத்தினருக்கும் அ.சா.1 ன் குடும்பத்தினருக்கும் இடையே சொத்து பிரச்சனை இருந்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.07.03 16:14:56 +0530

11. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெறும் அளவுக்கு பெரிய காயம் இல்லை என்றால் அதைப்பற்றி என்னால் கருத்து கூற முடியாது, மருத்துவர் தான் முடிவு செய்வார்கள்.

12. எதிரிகளின் குடும்பத்துக்கும் அ.சா.1 ன் குடும்பத்துகும் அடிக்கடி வாய்தகராறு ஏற்பட்டு அதன் பேரில் சாத்தான்குளம் காவல்நிலையம் வந்து புகார் மனு கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

13. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மிகவும் பள்ளமான பகுதி என்றும் அதன்காரணமாகதான் தண்ணீர் தேங்கியுள்ளது என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.07.03 16:15:08 +0530

Judicial Magistrate, Sathankulam.